சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமும் கேட்கப்பட்டனர். இதற்கு அவர்கள் இதுவரை பதில் அளிக்கவில்லை. இதற்கிடையில் மேற்சொன்ன ஏற்பாடு இந்திய மின்சாரச் சட்டத்திற்கும், மின்வாரிய நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் மீறியதாக இருப்பதால் மேற்சொன்ன அனுமதியற்ற மின்சக்தி இணைப்பை நிறுத்திவிடுமாறு திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு எடுத்துக் கூறப்பட்டது. அவ்வாறே திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு 20-11-74 லிருந்து மின்சக்தி வழங்குவதை நிறுத்திவிட்டது.

எனினும், தனிப்பட்ட மின் இணைப்பிற்கு கோயம்புத்தூர் பைகாரா மின்சக்தி ஏற்பாடு மேற்பார்வைப் பொறியாளருக்கு, விண்ணப்பிக்குமாறு திருப்பூர் திருவாளர்கள் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : இதில் இருக்கிற இரண்டு முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறு காரணமாக ஆறு மாத காலமாக அந்த மில் மூடப்பட்டு அதில் பணியாற்றுகிற தொழிலாளர்களின் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மனதில் கொண்டு விரைவாக அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால்தான் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டு முதலாளிகளும் சேர்ந்து மின்சாரத் துறையை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இந்த விவரத்தில் இருந்து தெரிகிறது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டாம் என்கிறார்கள். முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது கஷ்டம் இருந்தால் அவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விண்ணப்பித்தால் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(7) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU THOPPUR THIRUVENGADAM : Sir, I rise to present the reports of the Committee on Estimates on the Jail Department, Co-operative Sugar Mills and Compensation and assignment to local bodies and Panchayat Raj institutions.

[Thiru Thoppur Thiruvengadam]

As the reports are under print, the copies will be sent to the members later.

Thank you.

MR. DEPUTY SPEAKER : Now we shall take up Government Bills.

(5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.
(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Sir, I move —

" Under Rule 21 (3) of the Assembly Rules, item (5) under Government Bills be taken up before item (1)"

The motion was put and carried.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சட்ட மன்றக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இன்று கடைசி நாள். அது அறிவிக்கப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அறிவிக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வந்து அறிவிப்பார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : நேற்று அஜென்டாவில் இந்தப் பில்கள் சேர்க்கப்படவில்லை. நேற்று ராத்திரிதான் இந்த ஸிட்டி போலீஸ் ஆக்ட், இது இரண்டும் கிடைத்திருக்கிறது. நேற்று ராத்திரி கொடுத்தால் எப்படி அவற்றைப் படித்துவிட்டு பேசுவது? ஐந்து பில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பில்லையும் ஒவ்வொரு நாளாவது டிஸ்கஸ் செய்ய வேண்டும். பில்களுக்கு கொடுக்கும் மதிப்பை ரொம்பவும் குறைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்

இவை சட்டம் ஆக இருக்கின்றன. ஒவ்வொரு பில்-க்கும் டிஸ்கஸ் செய்ய ஒவ்வொரு நாள் வேண்டும். கடைசி ஐட்டத்தை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மெம்பர்கள் பேசவேண்டும் என்று நினைக்கிறீர்களா அல்லது மெம்பர்கள் பேசாமலேயே இவைகளை நிறைவேற்றிவிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நேற்று மூவ் செய்த பில்கள் நேற்று நைட்தான் சர்குலேட் செய்ய முடியும். முதலில் உள்ள பில்லை தள்ளித்தான் எடுத்துக் கொள்ளப் போகிறோம். எனவே உறுப்பினர் அவர்களுக்கு படிக்க போதிய அவகாசம் இருக்கிறது.